# அரசியலில் பணத்தைக்கட்டுப்படுத்தல்
# ஓர் அறிமுகம்

வைத்தியர்.மாக்னஸ் ஓஹ்மான்
IFES சிரேஸ்ட அரசியல் நிதி ஆலோசகர்
2016

தேர்தல் முறைமைக்கான சர்வதேச நிறுவனம்

பதிப்புரிமை © 2016 தேர்தல் முறைமைக்கான சர்வதேச நிறுவனம்
அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை.

**அனுமதிக்கூற்று:** இந்த வெளியீட்டின் எந்தவொரு பாகமும்,எந்த வடிவிலும் எந்த வழிமுறையிலும் இலத்திரனியல் அல்லது இயந்திரவியல் பிரதி பண்ணல்,பதிவு செய்தல் அல்லது ஏதாவது தகவல் சேமிப்பகம் மற்றும் திரும்பப் பெறுதல் முறைமூலம் வெளியீட்டாளரின் எழுத்துமூல அனுமதியின்றி மீள உருவாக்குதல் முடியாது.

அனுமதிக்கான வேண்டுகோள் பின்வரும் தகவல்களை உள்ளடக்கியிருக்க வேண்டும்.

- பிரதி பண்ண எண்ணியுள்ள அனுமதி கோரும் பொருளின் விபரம்.
- அவ்வாறு பிரதிபண்ணப்பட்ட பொருள் பாவிக்கப்படும் நோக்கம்.
- உங்களது பெயர்,பதவி,கம்பனி அல்லது நிறுவனத்தின் பெயர்,தொலைபேசி இல,பெக்ஸ் இல,மின்னஞ்சல்,முகவரி

அனுமதிக்கான வேண்டுகோள்களை அனுப்ப வேண்டிய முகவரி

International Foundation for Electoral Systems
2011 Crystal Drive
Arlington, VA 22202
E-mail: editor@ifes.org
Fax: 202.350.6701

*இந்த வெளியீட்டில் வெளிப்படுத்தப்பட்டுள்ள ஏதாவது கருத்துக்கள்,கண்டுபிடிப்புக்கள்,முடிவுரைகள் அல்லது சிபாரிசுகள் என்பன ஆசிரியரினுடையது அவை தேர்தல் முறைமைக்கான சர்வதேச நிறுவனத்தின் பார்வையான இருக்க வேண்டிய அவசியமில்லை.*

# IFES பற்றி

தேர்தல் முறைமைக்கான சர்வதேச நிறுவனமானது பிரஜைகளின் சுதந்திரமானதும்,நீதியானதுமான தேர்தலில் பங்குபற்றுவதற்கான உரிமைக்கு ஆதரவு வழங்குகின்ற அமைப்பு ஒன்றாகும். எமது சுதந்திரமான பாண்டித்தியமானது தேர்தல் முறைமைகளை வலிமைப்படுத்துவதுடன் உள்ளூர் திறன்விருத்தியை கட்டியெழுப்புவதன் மூலமாக நிலையான தீர்வை வழங்குவதற்கு உதவுகின்றது.

ஜனநாயகத்தை மேம்படுத்தும் பூகோள தலைவராகிய நாம், நல்லாட்சியையும், ஜனநாயக உரிமையையும் முன்னேற்றுவது.

- தேர்தல் அதிகாரிகளுக்கு தொழில்னுட்ப உதவிகளை வழங்குதல்
- தேர்தல் செயன்முறையில் பிரதிநிதித்துவமற்றவர்களை பங்குபற்றுவதற்கு அவர்களை வலுவூட்டல்
- தேர்தல் வட்டத்தை முன்னேற்றுவதற்கு கள ரீதியான ஆய்வுகளை நடைமுறைப்படுத்தல். மூலமாகும்.

1987 முதல் IFES ஆனது சுமார் 135 நாடுகளுக்கு அதிகமாக பணியாற்றியுள்ளது.-ஜனநாயகத்தை அபிவிருத்தி செய்வதிலிருந்து முதிர்ந்த ஜனநாயகம் வரை. மேலதிக விபரங்களைப்பெற www.IFES.org எனும் இணையதளத்தை தரிசிக்கவும்.

IFES ஆனது கடந்த தசாப்த காலமாக அரசியலில் பணம் தொடர்புபடுவது சம்பந்தமாக வெளிப்படுதன்மையையும், பொறுப்புக்கூறல் தன்மைக்கும் ஆதரவளித்துக் கொண்டிருக்கிறது. இனது வேலைக்கு இயல்பான அன்பளிப்பு தேர்தல் செயன்முறைக்கும் ஜனநாயகத்திற்கும் உதவுவதுதான். அரசியல் நிதியானது அரசியல் முறைமையில் மக்களது நம்பிக்கையை அதிகரிக்கவும்,அரசியல் ஊழல்களை குறைக்கவும் உதவுகின்றது.

IFES ஆனது அரசியல் நிதி தொடர்பாக எல்லாக் கண்டங்களிலும் பணியாற்றுவதுடன்,இது வரை 40ற்கு மேற்பட்ட நாடுகளில் ஈடுபட்டுள்ளது. அதாவது பாராளுமன்றத்திற்கு உதவுதல்,அரசியல் கட்சிகள், EMB’s சிவில் அமைப்புக்கள் மற்றும் ஊடகங்கள்.

## உள்ளடக்கம்

அறிமுகம் .......................................................................................... **Error! Bookmark not defined.**

அரசியலில் பணம் ஈடுபடுவதனால் உருவாகும் சாத்தியமான பிரச்சினைகள் **Error! Bookmark not defined.**

அரச வளங்களை துஷ்பிரயோகம் செய்தல் ............................................ **Error! Bookmark not defined.**

அரசியல் நிதி தொடர்பான முறையான ஒழுங்குவிதிகள் ........................................................................ 5

அமுல்படுத்தல் ...................................................................................... **Error! Bookmark not defined.**

சிவில் சமூகம்,ஊடகங்களின் பங்கு ..................................................... **Error! Bookmark not defined.**

முடிவுரை ............................................................................................ **Error! Bookmark not defined.**


வளங்கள் ........................................................................................................................................ 14

# அறிமுகம்

*''பணமானது அரசியலின் தாய்ப்பாலாகும்''*
ஜெசி அன்ரூ (ஐ.அ.அரசியல்வாதி மற்றும் கலிபோர்னியா மாநில பொருளாளர்,1922-1987)

நாடுகள் மற்றும் பிராந்தியங்களுக்கிடையில் அரசியலின் இயல்பானது குறிப்பிடத்தக்களவு வித்தியாசங்களைக் கொண்டுள்ளது. உலகின் எந்தப்பாகத்திலும் அரசியல் தீர்மானங்களை எடுக்கும் செயல்முறையில் பணம் தொடர்புபடாத நாடுகளில்லை.

**படம் 1 : நவீன சமூகத்தின் முக்கியமான விடயங்களில் அரசியல் நிதியானது மத்தியில் உள்ளது.**




அரசியலில் பணம் அல்லது அரசியல் நிதியானது ஏதாவது நவீன சமூகத்தின் முக்கியமான விடயங்களுடன் தொடர்புபட்டுள்ளது. அரசியல் நிதியை முகாமைத்துவம் செய்வது நம்பகமான உண்மையான தேர்தலுக்கும்,தேர்தல் பிரச்சாரங்களுக்கும் அவசியமாகின்றது. ஏனென்றால் இது வேட்பாளர்களுக்கிடையில் இருக்கும் போட்டித்தன்மையை வளைக்கும் தன்மை கொண்டது. முறையான முகாமைத்துவமானது நாட்டின் பயனுள்ள ஆட்சியை உறுதிப்படுத்த உதவுகின்றது.எனினும் ஊழலானது நல்லாட்சியை மிகவும் இலகுவாக பாதிப்படையச் செய்துவிடும்.

ஒரு ஜனநாயக சமூகத்தில் பிரஜைகளுடனான தொடர்ச்சியான உரையாடல்கள் அவசியமாகின்றது. இந்த செயல்முறைக்கு நிதி தேவைப்படுகின்றது. இங்குள்ள கரிசனை என்னவென்றால், பணமானது அரசியல்வாதிகளை வாக்காளர்களை விட அதிகம் பங்காளிப்பாளர்களை உருவாக்கின்றது. ஊழலற்ற சட்டரீதியான நிதியை அணுகுவதானது அரசியல்வாதிகளின் சலனத்தைக் குறைக்கின்றது. அரசியல் கட்சிகளும் சிவில் சேவையாளர்களும் ஊழலான நடத்தைகளில் ஈடுபடுவதற்கு அரசியலில் பணம் இருப்பது இவ்வாறான இடர்களை உருவாக்குகின்றது.

பணம் அவசியம் தான் என்றாலும் இது அரசியலில் பிரச்சினைக்குரிய ஒன்றாகும். எனவே இதனது விளைவுகளை அதன் சாதகமான அம்சங்களை வளர்த்து எப்படி கட்டுப்படுத்துவது என நாம் கவனிக்க வேண்டும். என்பதுடன் அதனது எதிர்மறையான செல்வாக்கை கட்டுப்படுத்தவும் அதற்கு எதிராக செயற்படவும் வேண்டும்.எல்லா நாடுகளுக்கும் பொருந்தக்கூடிய வகையில் பொதுவான முறையொன்றில்லை ஒவ்வொரு தனி நாட்டின் நிலைமைக்கும் பிரச்சினைகளுக்கும் ஏற்றவாறு மதிப்பீடு செய்து அதனது குறிக்கோள்கள் தீர்மானிக்கப்பட வேண்டும் இதன் மூலம் ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாடானது கற்றுக்கொள்ள முடியாது என்று கருத்தல்ல.,

## கண்ணோட்டம்

இந்த விளக்கப் பத்திரமானது அரசியல் நிதியில் காணப்படும் முக்கிய பிரச்சினைகளும் அதற்கான தீர்வுகளுக்குமான அறிமுகமொன்றாகும். அதிகமான சாத்தியமான பிரச்சினைகள் இருக்கும் போது நாங்கள் அரச வளங்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுவது தொடர்பாக இதனை ஒழுங்குபடுத்துதல் மற்றும் இதற்கெதிராக போராடுதல் எவ்வளவு கடினமானது எனக் காட்டுவதற்கு தேர்வு செய்து முன்னிலைப்படுத்தியுள்ளோம்.

இந்தப்பத்திரமானது அரசியல் நிதியை ஒழுங்கமைப்பதில் வெவ்வேறு நாடுகள் எவ்வாறு ஒழுங்குமுறைகளை அமுல்படுத்துகின்றனர் என்ற பூகோள அனுபவங்களை உள்ளடக்கியுள்ளது. வெளிப்படுத்துகை தொடர்பான விதிகள்(நிதி அறிக்கைகள்): பங்களிப்புக்கும் செலவழிப்புக்குமான தடைகள்: மற்றும் பொது நிதி வழங்கலானது முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது. சிவில் சமுகத்தினதும்

ஊடகத்தினதும் பங்கு விபரிக்கப்பட்டுள்ளது. இது தவிர பூகோள ரீதியான அரசியலில் பணம் தொடர்பான கற்றல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்த ஆவணத்தில் நாங்கள் அரசியல் நிதி தேர்தல் பிரச்சாரத்திற்கு அரசியல் கட்சிக்கு நிதி வழங்கல் என்றால் என்ன என்பதனை வரையறுத்துள்ளோம். இங்கு தேர்வு செய்யப்பட்ட அதிகாரியின் நடத்தைகள் மற்றும் அரசியல்வாதிக்கும் சிவில் உத்தியோகத்தருக்குமிடையிலான அரசியலில் பணம் இருப்பதனால் எதிர்கொள்ளும் கருத்து முரண்பாடு உள்ளடங்கலாக விரிவான வரைவிலக்கணம் சாத்தியமானதாகும்.

## அரசியலில் பணம் இருப்பதனால் ஏற்படக்கூடிய சாத்தியமான பிரச்சினைகள்.

முன்னர் கூறியது போல,நவீன அரசியலில் பணமானது அவசியமானதொன்றாகும். ஆனால் இது உலகெங்கிலும் ஜனநாயகத்திற்கு சவாலாக இருக்கின்றது. ஒரு வகையில் அல்லது வேறுவகையில் இந்தப்பிரச்சினைகளானது வாக்காளர்களுக்கும் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கும் அல்லது தேர்தலை எதிர்பார்ப்பவர்களுக்கிடையில் காணப்படும் தொடர்புகளை உடைப்பதுடன் தொடர்புபட்டவைகளாக இருக்கின்றன. உண்மையான பிரச்சினையானது பிராந்தியத்திற்கு பிராந்தியம் மற்றும் நாடுகளுக்கிடையில் வேறுபடும்.சில பொதுவான சவால்கள்களே கீழே தரப்பட்டுள்ளன.

### பண ரீதியான நலன்கள்அரசியல் முறைமையில் தேவையற்ற செல்வாக்குச் செலுத்த முடியும்

உலகம் முழுவதும் ‘‘ஒரு நபருக்கு,ஒரு வாக்கு’’ என்ற அடிப்படையானது உருவாக்கப்பட்டுள்ள நிலையில் வளங்களில் காணப்படும் வித்தியாசமானது மற்றவர்களை விட சிலரது குரலானது மேலோங்கி ஒலிக்கின்றது.பணமுள்ளவர்கள் அரசியல்வாதிகளையும்,அரசியல் தீர்மானங்களிலும் செல்வாக்குச் செலுத்துவதனால் அவை ஜனநாயத்திற்கு பல வழிகளில் பிரச்சினையாக அமைகின்றன.

### தேர்தல் பிரச்சாரங்களுக்காக வியாபார நிறுவனங்களிலிருந்து பெறப்படும் பங்களிப்பானது பொது நிதியில் ஊழல் ஏற்பட வழிவகுக்கும்.

அனேகமான நாடுகளில் தனியார் நிறுவனங்கள் அரசியல் கட்சிக்கு அல்லது தேர்தல் பிரச்சாரங்களுக்கு அன்பளிப்பு செய்வது அனுமதிக்கப்பட்ட ஒரு விடயமாகும். எனினும்,பல நாடுகளில் அரசியல் பிரச்சாரங்களுக்காக ஆதரவு வழங்கிய நிறுவனங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்ற பயமும் நிலவுகின்றது. இது பொது பொருட்கொள்வனவு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் எதிர் மறையான செல்வாக்கினைச் செலுத்தும். இது ஜனநாயகத்தை மாத்திரமின்றி நல்லாட்சி மற்றும் நிர்வாக முறையையும் பாதிக்கக்கூடும்.

### அரச வளங்களை துஷ்பிரயோகம் செய்தல்

உலகின் அனேகமான பாகங்களில் அரசிலுள்ள அரசியல் கட்சிகள் அரச வளங்களை துஷ்பிரயோகம் செய்வதன் மூலம் தங்களது பலத்தை தக்க வைத்துக் கொள்ளுவர். இது தொடர்பான பிரச்சினைகள் இந்த அறிக்கையின் பின்னர் கலந்துரையாடப்படும்.

### சட்டவிரோத நிதி அரசியலில் செல்வாக்குச் செலுத்தும்.

சில உலக நாடுகளில் வளர்ந்து வருகின்ற ஒரு பிரச்சினையாக சட்டமுரணான நிதி அரசியலில் தொடர்புபடுவதாகும். சில நேரம் குற்றவாளிகள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள அரசுடன் இணைந்து செயற்பட விரும்புவார்கள். வேறு சந்தர்ப்பங்களில் தேர்தல் பிரச்சாரமானது பணத்தை துவைத்து விடுகின்றது. குற்றவாளிகளும் அன்பளிப்புச் செய்து அரசியல்வாதிகளின் செல்வாக்கைப் பெற்று அவர்களது சட்டமுரணான செயற்பாடுகளுக்கு எதிரான விசாரணைகளை முடக்குவதற்கு முயற்சிப்பர்.

### வெளிநாட்டு பணத்தின் செல்வாக்கானது தேசிய அரசியலின் இறையாண்மைக்கு அச்சுறுத்தலாக இருக்கும்.

உலகமயமாதல் அதிகரித்துக் கொண்டு வந்தாலும் ஒவ்வொரு நாடும் தனது அரசியல் நிறுவனத்தை பராமரித்து வருகின்றது. அதாவது தேசிய மற்றும் உள்ளூர் நிறுவனங்களாகும். வெளிநாட்டிலிருந்து வருகின்ற நிதியானது தேர்தல் பிரச்சாரங்களுக்கு பயன்படுத்தும் போது அரசியல்வாதிகள் வாக்காளர்களது தேவைகளைவிட வெளிநாட்டவர்களது விருப்பம் என்ன? என்பதனை செவி சாய்க்க வேண்டி ஏற்படுகிறது.

இது பரந்தளவில் இடம்பெறுமாக இருந்தால் நாட்டின் இறையாண்மைக்கு அச்சுறுத்தல் ஏற்பட வாய்ப்புள்ளது.

### பாரியளவிலான தேர்தல் பிரச்சார செலவுகள் புதிய அரசியல் அலைகளை உருவாகுவதை கடினப்படுத்தும்.

கொடை வழங்குனர்கள் தகாத முறையில் அரசியல் செயன்முறையில் செல்வாக்கு செலுத்தாமல் இருந்தாலும் மற்றும் சட்டமுரணான வெளிநாட்டு நிதி அல்லது வேறு சட்டமுரணான நிதி பாவிக்கப்படாமல் இருந்தாலும் பணமானது இன்னும் எதிர்மறையான விளைவையே ஏற்படுத்தும். ஒரு புதிய அரசியல் பலமானது அதிகளவான பணமானது தேர்தல் பிரச்சாரங்களுக்காக செலவிடப்படும் போது தனது குரலை மற்றவர்களுக்கு கேட்க வைப்பது கடினமாகும். தேர்தல் முறைமையானது பிரபலமான கருத்துக்களை மாற்றுவதற்கு உரியதாக இல்லை. இந்த அதிகளவான நிதி தேர்தல் பிரச்சாரத்திற்காக செலவிடுவதானது பெண்கள் அரசியலில் ஈடுபடுவதனை பிரச்சினைக்குரிய ஒன்றாக மாற்றுகின்றது. பொதுவாக பெண் எனப்படும் போது பணக்காரர்களின் வலையமைப்புடனான அணுகல் மிகக் குறைவாகவே இருக்கும்.

### வாக்கு வாங்குதல்

பொதுவாக அனேகமான உலக நாடுகளில் பிரபலமான ஆதரவின் மூலம் தேர்தலை வெல்வதனை விட அதிகமாக செலவு செய்தே வெல்லப்படுகின்றது. சில நேரம் வாக்குகளை வாங்கும் செயற்பாடானது நேரடி பரிவர்த்தனை மூலம் இடம்பெறுகின்றது. அதாவது தனிநபர் வாக்காளர்கள் குறித்த விதத்தில் வாக்குப்பத்திரத்தைப் கைபேசி மூலம் படம் எடுத்தல் உள்ளடங்கலாக வாக்களிப்பதற்காக பணத்தைப் பெறுகின்றனர். சில நேரம் வாக்குகளானது மறைமுகமாக இனவாதத்தின் மூலம் அதாவது சில நேரங்களில் மதகுருமார்கள் மற்றும் மதத்தலைவர்களுக்கு பணம் கொடுத்து வாக்காளர்களது வாக்குகளைப் பெறுவதற்கு செல்வாக்குச் செலுத்துபவர்களாக மாற்றப்படுகின்றனர். எது எப்படி இருந்தாலும் வாக்குகளை வாங்குதல் என்பது ஜனநாயக தேர்தலிற்கு பெரும் தடையாகும்.


## அரச வளங்களை துஷ்பிரயோகம் செய்தல்

*தேர்தல் போட்டித்தன்மையை சேதப்படுத்துவதற்கு அப்பால் பதவியில் இருக்கும் கட்சியானது அரச வளங்களை உட்படுத்துவது அரசாங்கத்தின் தரத்தில் எதிர்மறையான செல்வாக்கை ஏற்படுத்தும்....."*

Speck, Bruno & Fontana, Alessandra (from the publication *Milking the System*)

அதிகளவான தேர்தல் போட்டியாளர்கள் இருக்கும் போது,சிலர் பதவியிலும் ஆட்சியிலும் இருந்து கொண்டு தேர்தலில் போட்டியிடுகின்றனர்.அவ்வாறான சந்தர்ப்பங்களில் தன்னைச்சுற்றியிருக்கும் அரச வளங்களை பாவிப்பதற்கான சலனத்தை கட்டுப்படுத்துவது மிகக் கடினமே. ஆப்கானிஸ்தானிலிருந்து ஸிம்பாப்வே வரையுள்ள குற்றச்சாட்டானது பொது வளங்களானது பதவியில் இருக்கும் கட்சிக்கு ஆதரவாக அல்லது தேர்தல் பிரச்சாரங்களுக்காக பாவிக்கப்பட்டன என்பதாகும். இது எதிரணியினருக்கு பிரச்சாரம் செய்வதற்கு மிகக் கடினமாக இருக்கும்.

**படம்2: அரச வளங்களின் வகைகள்**




சில தீவிரமான சமயங்களில் அரசாங்கத்திற்கும்,அரச அரசியல் கட்சிக்கும் இடையிலான கோடு தெளிவற்றதாகவும் ஒன்றிலிருந்து மற்றையதை பிரித்தறிய முடியாததாகவும் இருக்கும்.இவ்வாறான சந்தர்ப்பங்களில் தேர்தல் மூலம் ஆட்சி மாற்றம் ஏற்படுத்துவது கடினமாக மாறுவதுடன் இதன் விளைவாக ஜனநாயகம் பாதிக்கப்படும்.

பதவியில் இருக்கும் அரசியல் கட்சிகளும்,அரசியல்வாதிகளும் எப்போதும் அரச வளங்களை துஷ்பிரயோகம் செய்வதற்கான வழிகளை கண்டுபிடித்துக் கொண்டிருப்பர். அரச வளம் என்பது பணம் மாத்திரம் அல்ல. இது நிறுவன ரீதியான வளங்கள் அதாவது நபர்கள் மற்றும் அரச ஊடகம் மற்றும் ஏனைய தொடர்பாடல் கருவிகள் என்பவற்றை உள்ளடக்கும். அரச ஊடகங்களை பக்கச்சார்பாக பாவிப்பதானது அனேகமான நாடுகளில் இடம்பெறும் பிரதம உதாரணமாகும்..

பதவியில் இருப்பவர்கள் தங்களது ஒழுங்குமுறை ஆணையை துஷ்பிரயோகம் செய்து நடத்தைகளைக் கட்டுப்படுத்துவதற்கு தேவையான சட்டங்களையும்,ஒழுங்கு விதிகளையும் உருவாக்குதல். அதாவது குற்றவியல் கோவையில் மாற்றங்கள் அல்லது திருத்தங்களைக் கொண்டு வந்து வாக்குச்சீட்டில் வாக்காளர்கள் இடம்பெறும் ஒழுங்குவரிசையை மாற்றுதல்.சில சமயங்களில்,பதவியிலிருக்கும் எதிர்கட்சியினர் தேர்தல் பிரச்சாரங்களை மேற்கொள்ளாது இருப்பதற்கு தேவையான வழிகளை கண்டுபிடிப்பர். இறுதியாக பதவியில் இருப்பவர்கள் தங்களது அமுல்படுத்தும் வளங்களை உபயோகித்து ஒழுங்குமுறை வளங்களினால் உருவாக்கப்பட்ட சட்டதிட்டங்களை அமுல்படுத்துவதற்கு பாதுகாப்பு மற்றும் சட்ட அமுல்படுத்தும் நிறுவனங்களைப் பயன்படுத்துவர். எதிரணியினருக்கு ஊர்வலம் செல்வதற்கு தடை விதித்தல், எதிரணி அரசியல்வாதிகளை,ஆர்வலர்களை,நிதி வழங்குபவர்களை துன்புறுத்துதல் என்பன பொதுவாக அனேகமான நாடுகளில் காணப்படும் துஷ்பிரயோக வகைகளாகும்.

இவ்வாறு பல வடிவங்களில் துஷ்பிரயோகம் இடம்பெறுவதனால், இந்த செயற்பாடுகளுக்கு எதிராக செயற்படுவதற்கு வித்தியாசமான முறைமைகள் மற்றும் ஒழுங்கு விதிகள் காணப்படுகின்றன. இந்த முறைமைகளானது கீழ் வரும் தலைப்புக்களில் விவரிக்கப்படுகின்றன.

- பொது நிறுவனங்கள் அரசியலிற்கு சாதகமாக அல்லது பாதகமாக செயற்படுவதனை தடை செய்தல்
- பொது நிறுவனங்கள் சில வகையான நடத்தைகளில் ஈடுபடுவதனை தடை செய்தல் (எல்லா நேரத்திலும் அல்லது ஒரு குறிப்பிட்ட காலத்தில் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபடுதல்,பிரச்சார காலத்தில் அரசின் அபிவிருத்தி திட்டங்களை ஆரம்பித்தல்)
- அரசியல்வாதிகள் பொது நிறுவனங்களிலிருந்து சாதகமான விடயங்களை பெறுவதனை தடை செய்தல்.

ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் அரசியல் கட்சிகளுக்கும்,தேர்தல் பிரச்சாரங்களுக்கும் பொது நிதி வழங்கப்படுவதானது ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு நடத்தையாகும்.மற்றும் இது பதவியில் இருப்பவர்கள் நன்மையடைவதனை குறைக்கும். இது ஒப்புரவு அடிப்படையில் செய்யப்பட வேண்டும். ஏதிரணியினரை பாராபட்சமாக நடாத்துவதாக இருக்கக்கூடாது.

அரசியலில் பணம் அம்சம் என்பது அரச வளங்களை துஷ்பிரயோகம் செய்ய தூண்டும் என்பது பொதுவானதாகும். மற்றும் திறனை சீர்குலைக்கும்.எனவே இவற்றை முறையான ஒழுங்குவிதிகளை மாத்திரம் வைத்துக் கொண்டு கையாளுவது கடினமாகும். அரச வளங்களை துஷ்பிரயோகம் செய்வதற்கு எதிரான நடவடிக்கைகளை செய்வதற்கு அரசியல் நிதி மேற்பார்வை குழுவின் வலிமையான மற்றும் ஈடுபாட்டு கண்காணிப்பு நடவடிக்கைகளும், சிவில் சமுகத்தின் மற்றும் ஊடகத்தின் இலஞ்ச ஒழிப்பு நடவடிக்கைகள் என்பனவும் மிகவும் அவசியமாகின்றது. இறுதியில் துஷ்பிரயோகத்திலிருந்து முற்றாக விடுவிப்பதற்கு அரசியல் கட்சிகள் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடும் போது அதற்கு ஆதரவான பிரபல ஆதரவினை வாபஸ் வாங்க வைக்க வேண்டும்.

# அரசியல் நிதியின் முறையான ஒழுங்குவிதிகள்

*"ஒரு நாட்டில் ஊழல் அதிகளவில் இருந்தால் அதிகளவான சட்டங்களும் இருக்கும்"*

Tacitus (Roman historian, 55-120 AD)

அரசியலில் பணம் தொடர்பாக விரும்பத்தகாத நடத்தைகளை கட்டுப்படுத்துவதற்கான பொதுவான முறைதான் சட்டங்களையும்,ஒழுங்குவிதிகளையும் ஸ்தாபிப்பது. வெளிப்படுத்துகைக்கான விதி (நிதி அறிக்கை) ஆனது வெளிப்படுதன்மையை அடைவதற்கு எத்தணிக்கின்றது. தடைகளும்,மட்டுப்பாடுகளும் நேரடியாக சில வகையான நடத்தைகளை நீக்குவதற்கு பயன்படுத்தப்படுகின்றது. பொது நிதியானது தனிப்பட்ட நபர்களிடம் அரசியல் கட்சிகளும், வேட்பாளர்களும் தங்கியிருப்பதனைக் குறைக்கின்றது. இங்கே வேறொரு வகையான அரசியல் நிதி ஒழுங்குவிதிகள் காணப்படுகின்றன. ஆரச வளங்கள்,ஊடக துஷ்பிரயோகத்திற்கு எதிரான விதிகள், தேர்தல் பிரச்சார காலங்களில் செலவுகளை மேற்கொள்வதற்கு தேவையான காலஎல்லையில் மட்டுப்பாடுகள்,உத்தியோகபூர்வ தேர்தல் பிரச்சார கால எல்லையை பிரகடணம் செய்தல் என்பன சில உதாரணங்களாகும்.என்ன வகையான விதிகள் உருவாக்கப்பட்டாலும் அவை அந்த நாட்டின் இலக்கிற்கும் சூழலுக்கும் பொருத்தமானவையாக இருக்க வேண்டும்.

**படம் 3 : பல்வேறு பிராந்தியங்களின் வெளிப்படுத்துனை தேவை**

| பிராந்தியம் | அரசியல் கட்சிகள்(தேர்தல் தொடர்பாக வருடாந்தம்) | வேட்பாளர் |
|---|---|---|
| ஆபிரிக்கா | 70%/54% | 54% |
| அமெரிக்கா | 60%/59% | 53% |
| ஆசியா | 87%/41% | 71% |
| ஐரோப்பா | 93%/73% | 77% |
| மத்திய கிழக்கு மற்றும் வட அமெரிக்கா | 75%/9% | 45% |
| உலகம் | 75%/55% | 64% |

## வெளிப்படுத்துகை

அரசியல் கட்சிகளினதும், வேட்பாளர்களினதும் நிதி தொடர்பான தகவல்கள் மக்களுக்கு கிடைக்கக்கூடியதாக இருப்பின், அரசியல் நிதியை கட்டுப்படுத்துவதில் வினனத்திறனான முறையைக் கையாளலாம்.இந்த அறிவு இல்லாமல் ஏனைய ஒழுங்குவிதிகள் கடைபிடிக்கப்பட்டுள்ளனவா என்பது சாத்தியமற்றதாகும்.

அரசியல் நிதியில் வெளிப்படுதன்தையானது ஐக்கிய நாடுகளின் ஊழலுக்கு எதிரான பிரகடனத்தின் மூலம் உருவாக்கப்பட்டுள்ளது. (UNCAC), இது கூறுவதாவது " சகல நாடுகளும் கட்டாயம் பொருத்தமான சட்டம் மற்றும் நிர்வாக நடவடிக்கைகளை இந்த பிரகடனத்தின் குறிக்கோள்களிற்கு இணங்க நாட்டின் அடிப்படைச் சட்டத்திற்கு அமைவாக வேட்பாளர்களுக்கான நிதி,தேர்வு செய்யப்பட்ட பொது அலுவலர்,தேவையானவிடத்து அரசியல் கட்சிகளின் நிதி போன்றவற்றில் வெளிப்படு தன்மையை உறுதி செய்தல் கவனிக்கத்தக்கது."[1]

எனினும் எல்லா நாடுகளும் இவ்வாறான விதிமுறைகளை அறிமுகப்படுத்தவில்லை. படம் 3 காட்டுவது அரசியல் கட்சிகளுக்கும்,தேர்தல் வேட்பாளர்களுக்குமான அறிக்கையிடும் தேவை உலகம் பூராகவும்

[1] UNCAC Article 7(3).

[2] Data from International IDEA (2012) see "Resources."

[3] Data from International IDEA (2012), see "Resources." A sometimes controversial issue is whether citizens of the

உள்ள நாடுகளின் பங்குகள் ஆகும். (2016ம் ஆண்டின் ஆரம்பத்தில் உள்ள தகவல்)[2]. அறிக்கையை தேவைப்படுத்தும் விதிமுறைகள் இருப்பதனால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள் அனைத்தும் நேர்த்தியானது அல்லது அவை மிகவும் கவனமான கணக்காய்வு செய்யப்பட்டன என்ற அர்த்தமில்லை.


ஒரு அரசியல் நபருக்கு வெளிப்படுத்துகை முறைமையை வடிவமைக்கும் போது கருத்திற் கொள்ள வேண்டிய நிறைய காரணங்கள் உள்ளன. அந்த முறைமையானது ஒவ்வொரு நாட்டிற்கும் பொருத்தமானதாக இருக்க வேண்டும். உதாரணம்: அந்த முறைமையானது வங்கி அமைப்பு முறையானது எவ்வாறு நன்கு உருவாக்கப்பட்டுள்ளதோ மற்றும் அரசியல் கட்சியினதும்,வேட்பாளர்களினதும் இணக்கம் என்பவற்றை கணக்கில் எடுக்க வேண்டும். நிதி அறிக்கைக்கான விதி முறைகள் பங்குதாரர்கள் அதனை மதித்து நடக்காதளவிற்கு சிக்கலானதாக இருக்கக்கூடாது.

ஏற்கனவே விவாதித்தது போன்று பொது வெளிப்படுத்துகையானது எதிர்கட்சிக்கும்,வேட்பாளர்களுக்கும் கொடைதருனர்களின் விருப்பத்தைக் குறைக்கும் ஒன்றாக மாறலாம்.அதன்மூலம் பதவியில் இருப்பவர்களுக்கு நன்மையை அதிகரிப்பதாக இருக்கலாம். இது வாக்கெடுப்பு பிரிவினைக் கருத்திற் கொண்டு பிரதிநிதித்துவம் செய்யும் நபர்களின் நிதி கொடுக்கல் வாங்கல்களைக் தீர்மானிக்க வேண்டும்.

## பங்களிப்பு மற்றும் செவலீனங்களுக்கான தடைகளும் மட்டுப்பாடுகளும்.

அரசியல் கட்சிகளும் வேட்பாளர்களும் வெளிப்படையாகவும் திறந்த மனதோடும் செயற்படுவர்களாயின், மேலதிக ஒழுங்குவிதிகள் தேவைப்படுவதில்லை என்ற ஒரு வாதம் சில வேளைகளில் எழுவதுண்டு.வாக்காளர்கள் தன்னிடம் இருக்கின்ற தகவல்களுக்கு அமைய அவர்களுடைய சொந்த முடிவுகளை மேற்கொள்ள முடியும் என்ற கருத்துள்ளது. உதாரணமாக ஒரு கட்சியானது அன்பளிப்புக்காக

**படம் 4 : பங்களிப்பு மற்றும் செலவுகள் மீதான தடைகளின் வகைகள்**




அதிகளவு செலவழிக்கின்றதாயின்,வாக்காளர்கள் அவர்களை எதிர்காலத்தில் மீண்டும் தேர்வு செய்வதிலிருந்து தவிர்த்து தண்டனை வழங்கலாம்.

எனினும், இவ்வாறான அணுகுமுறையானது எல்லா இடத்திலும் வினைத்திறனாக இருக்காது என்பதனை நம்புவதற்கு பல காரணங்கள் உண்டு. நிதியை அணுகுவதற்கான இடைவெளி அதிகமாக இருக்கும் போது அல்லது ஊடகமானது முழுமையாக சுதந்திரத்தை அனுபவிக்காத போது வாக்காளர்களுக்கு அரசியல் நிதி தொடர்பான தகவல்களை பெறுவது கடினமாக இருக்கும். அவ்வாறான நிலைமைகளில்,ஒழுங்குவிதிகளானது அரசியல் கட்சிகளினதும்,வேட்பாளர்களது நடத்தைகளை இலக்கு வைத்து உருவாக்கப்பட வேண்டும். அவ்வாறான நடத்தைகள் பற்றி தகவலோடு மட்டுப்படுத்தப்பட கூடாது.

பொருத்தமற்ற நடத்தைகளை கட்டுப்படுத்தும் ஒரு வழி தடைகளை விதிப்பதாகும். இவ்வாறான தடைகள் அரசியல் நபர்கள் "விரும்பத்தகாத" மூலங்களிலிருந்து நிதியைப் பெறுவதிலிருந்து தடை செய்ய

[2] Data from International IDEA (2012) see "Resources."

பயன்படுத்தப்பட வேண்டும். அதாவது வெளிநாட்டவர்கள். அரசியல் நிதி ஒழுங்குவிதிகள் தொடர்பான சர்வதேச IDEA தகவலானது 67 வீதமான 169 நாடுகள் வெளிநாட்டவர்களிடமிருந்து நிதி பெறுவதனை தடை செய்துள்ளன என வெளிப்படுத்தியுள்ளது.[3] சில நாடுகளில் பெருநிறுவனங்களிலிருந்து பிரச்சாரத்திற்கு பங்களிப்பதனை தடை செய்துள்ளது.இதற்காக பொதுவாக வழங்கப்படும் காரணம் பெருநிறுவனங்களானது அரசியல் நபர்களை பலவந்தப்படுத்த அல்லது செல்வாக்குச் செலுத்த முடியும் என நம்பப்படுவதனால் ஆகும். 2016 ல், 170 நாடுகளில் உள்ள 27 வீதமான இருக்கக்கூடிய தகவலுக்கு அமைய அவ்வாறான பங்களிப்புகளை தடை செய்கின்றது. பொது நிதியிலிருந்து வழங்கப்படும் பங்களிப்பை தடை செய்வது,ஒழுங்குவிதிகள் வழங்கப்பட்டுள்ள விலக்கழிப்புக்கிணங்க அனுமதிக்கப்படலாம்.இது அரச வளங்களை துஷ்பிரயோகம் செய்வதிலிருந்து தடை செய்வதற்காக ஒரு வழியாகும

அனேகமான நாடுகளில் பெயர் குறிப்பிடாத அன்பளிப்புக்களை தடை செய்யப்படுகின்றன. அவ்வாறான அன்பளிப்புக்கள் அனுமதிக்கப்பட்டால் அவை அடுத்து சரிபார்க்க முடியாத ஒன்றாகும். உதாரணமாக வெளிநாட்டவர் அல்லது பெருநிறுவனங்கள் அன்பளிப்புக்கள் உறுதி செய்யக்கூடியது. IDEA ன் 164 நாடுகளில் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் 70 வீதமானவை பெயரற்ற அன்பளிப்புக்களை முற்றாக தடை செய்கின்றன அல்லது குறித்த மட்டுப்பாடுகளை விதிக்கின்றன. பொதுவாக இவ்வாறான பங்களிப்பு தடை செய்யப்பட்டுள்ளன.

செலவுகளில் தடையை விதிப்பதானது வெளிப்படையான தீமைகளை இலக்கு வைக்கின்றது.அதாவது வாக்கு வாங்கல் மற்றும் தேர்தல் அதிகாரிகளுக்கு இலஞ்சம் கொடுத்தல் போன்றன. எனினும் சில நாடுகளில் வேறு நோக்கங்களை எட்டுவதற்காகவும் தடைகள் விதிக்கப்படுகின்றன. அதாவது தேர்தல் பிரச்சாரத்தின் போது தேர்தல் களமானது தனியார் விளம்பரம் மூலம் செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. சுதந்திரமான மற்றும் சமத்துவமான அச்சு மற்றும் ஒளிபரப்பு இணைந்து வழங்கப்பட வேண்டும். சில நேரங்களில் இது பணக்கார போட்டியாளர்களுக்கு கட்டுப்பாடு விதிப்பதாக பார்க்கப்படுகின்றது. விமர்சனமான விவாதமானது இவை சுதந்திரமான பேச்சைப் பாதிக்கின்றது எனக் கூறப்படுகின்றது.

சில சந்தர்ப்பங்களில் நாடுகள் சில செயற்பாடுகளை தடை செய்ய விரும்புவதில்லை. மாறாக மட்டுப்பாடுகளை விதிப்பதன் ஊடாக அவற்றைக் குறைக்கின்றன. மக்கள் அல்லது கம்பனிகளது பங்களிப்புக்களுக்கு மட்டுப்பாடு விதிப்பதன் மூலம் சில நாடுகள் அரசியல்வாதிகளினது தீர்மானங்களில் பாரியளவு அன்பளிப்பானது செல்வாக்குச் செலுத்தும் இடரை குறைப்பதற்கு விரும்புகின்றன. இவ்வாறான தடைகளானது அரசியல் கட்சிகளுக்கும் வேட்பாளர்களுக்கும் அதிகளவான மக்களை நிதி சேகரிக்க அணுக வழிவகுக்கின்றது. இதனால் பிரபல்யமான பங்குபற்றல் அதிகரிக்கும் மாற்றம் ஏற்படலாம் என நம்பப்படுகின்றது.

மட்டுப்பாடுகளானது அரசியல் கட்சி மற்றும் வேட்பாளர்கள் எவ்வளவு செலவு செய்கின்றார்கள் என்பதில் இருக்க வேண்டும். அனேகமாக நாடுகளில் பணக்கார மற்றும் ஏழை போட்டியாளர்கள் போட்டியிடுவதற்கான சமதளத்தை உருவாக்குவதை நோக்கமாக கொண்டு ஏற்படுத்தப்படுகின்றது. ஆனால் ஆக மொத்தம் தேர்தல் பிரச்சாரத்தில் செலவுகளை குறைப்பதற்கு நோக்கமாகக் கொண்டுள்ளது. இது தேசிய பொருளாதாரத்திற்கு அல்லது வறுமையின் மட்டம் தொடர்புடைய அதிகளவான செலவாக இருக்கக்கூடாது.சர்வதேச IDEA அரசியல் நிதி தகவலின் சுட்டிக்காட்டுவதானது 30 வீதமான நாடுகளில் அரசியல் கட்சிகளின் செலவுகளில் மட்டுப்பாடுகளை விதிக்கின்றது. 45 வீதமான வேட்டபாளர்கள்.

பங்களிப்புக்கள் மற்றும் செலவுகள் மீதான தடைகள் மற்றும் மட்டுப்பாடுகள் அரசியலில் பணத்தை கட்டுப்படுத்தும் கருவியாகும். எனினும், வெளிப்படையான முறைமை செயற்படுமாயின், ஒழுங்குவிதிகளை அறிமுகம் செய்வது சிறிய விடயமுள்ளது.அதே போன்று தடைகள் மற்றும் மட்டுப்பாடுகளை மீறுவதை கண்டுபிடிப்பது மற்றும் தண்டனைகள் தொடர்பாக வினைத்திறனான முறைமை இருக்க வேண்டும்.

---

[3] Data from International IDEA (2012), see "Resources." A sometimes controversial issue is whether citizens of the country residing abroad should be allowed to contribute to election campaigns. This may seem a reasonable principle, but in many countries, citizens residing abroad do not have a right to vote. It becomes very difficult to confirm that donations coming from outside of the country originate from a citizen and not foreign interests.

மட்டுப்பாடுகளை சுமத்துவதானது ஒரு விளைவு இருக்க வேண்டும் அதில் ஈடுபடுபவர்களுக்கு தண்டனை கிடைக்கும் என்ற எண்ணம் வர வேண்டும்.[4]

## அரசியல் கட்சிக்கும் தொகுதி வேட்பாளர்களுக்குமான பொது நிதி

மேலே கலந்துரையாடிய விதிமுறை வடிவங்கள் குறித்த நடத்தையை தடை செய்ய அல்லது தடுப்பதற்கு முயற்சி செய்கிறது.[5]அறிமுகத்தில் குறிப்பிட்டது போன்று நாம் அரசியலில் பணம் மிக அவசியமான பகுதி என அடையாளம் கண்டு கொள்ள வேண்டும். மற்றும் அரச பாதீட்டிலிருந்து வழங்கப்படும் ''தூய'' அல்லது ''ஒழுங்குபடுத்தப்பட்ட'' பணமானது ஆரோக்கியமான போட்டித்தன்மையையும், கலந்துரையாடலையும் கட்டுப்படுத்தாது அரசியலில் பணத்தினால் ஏற்படுத்தும் எதிர்மறையான விளைவுகளை குறைப்பதற்கு உதவி செய்யும்.

பொது நிதியினை அரசியல் கட்சிகளுக்கும் (பொதுவாக குறைவாக) வேட்பாளர்களுக்கு வழங்கப்படுவது பொது காரியாலயத்திற்கு பாவிக்கப்பட்டதானது சில இலத்தீன் அமெரிக்க நாடுகளில் 1920 ன் ஆரம்ப பகுதியில் பாவிக்கப்பட்டது. பின்னர் 1960 களில் ஐரோப்பாவிற்கு பரவியது. துற்போது மூன்றில் இரண்டு உலக நாடுகளில் பாவிக்கப்படுகின்றது.

பொது நிதி ஆதரவாளர்கள் வாதிடுகின்றனர் சிறியளவிலான குரலுள்ளவர்களுக்கும்,புதிய கட்சிகளுக்கும் அரசியல் களத்தில் வாய்ப்பளிக்கின்றது. இது அரசியல் வாதிகளுக்கு சட்டவிரோதமான மூலங்களில் இருந்து அன்பளிப்புக்களை பெறும் சலனத்தைக் அல்லது அரச வளங்களை துஷ்பிரயோகம் செய்வதிலிருந்து குறைக்கின்றது. விமர்சனவரிகள் ஆதரவாளர்களுக்கும்,அரசியல்வாதிகளுக்குமிடையிலான தொடர்பை இந்த பொது நிதி குறைத்துவிடும் என வாதிடுகின்றனர். அது மாத்திரமின்றி அரசியல் கட்சியினை அரசின் ஒரு பகுதியாகவும் மாற்றிவிடும் என அஞ்சுகின்றனர். மேலும் இவ்வாறான நிதியானது அரசை பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகளுக்கு மாத்திரம் கிடைக்கக்கூடியதாக இருந்தால், புதிய கட்சிகளுக்கு போட்டியிடுவதற்கு கடினமாக இருக்கும்.

பொது நிதியத்தை வடிவமைக்கும் போது தீர்வு காண வேண்டிய பிரச்சினைகள் –அவையாவன

- தகுதி பெறுவதற்கான தகுதிகள் (நிதியை யார் பெறத்தகுதியானவர்கள்)
- ஒதுக்கீடு நிபந்தனைகள் (யார் தகுதிபெற்றாலும் ஒரேயளவான ஒதுக்கீடு செய்வதா? ஆல்லது பிரபல்யமான ஆதரவிற்கு ஏற்ப ஒதுக்கீடு செய்வதா?)
- ஆதரவு வழங்கப்படும் நேரம் (தேர்தலிற்கு முன்னரா?பின்னரா?வருடாந்த ரீதியாகவா?)
- பொது நிதி ஆதரவின் வடிவம்(பணம் அல்லது மறைமுக நிதி அதாவது வரிவிலக்கு அல்லது ஊடகத்தை அணுகுதல்)


[4] The most effective way of ensuring compliance with spending limits is to set the limit so high that no one could reach it. This would, however, remove any purpose of the regulation.
[5] This section draws on the chapter on public funding in *Regulating Political Finance, the Global Experience* (2009) and ongoing research.

# அமுல்படுத்தல்

*"அதிகளவான விதிகள்.மிகக் குறைந்தளவிலான அமுல்படுத்தல்"*[6]
Michael Pinto-Duschinsky (Political Finance Scholar)

முறைசார் ஒழுங்குவிதிகளானது அரசியலில் பணத்தின் செல்வாக்கினால் ஏற்படும் எதிர்மறை விளைவைக் கட்டுப்படுத்தும். எனினும், அவை நடைமுறையில் சரியான பிரயோகப்படுத்தினால் மாத்திரமே இது உண்மையாக இருக்கும். வெளிப்படுத்துகை தேவைப்பாடு மற்றும் ஏனைய முறைசார் விதிமுறைகள் உடனடியாகத் தேவைப்படுகின்றன.ஆனால், அரசியல் நிதியில் வெளிப்படுத்தன்மையை அடைவதற்கு நிச்சயமாக போதுமாவையாக இல்லை.

**படம் 5 : அமுல்படுத்தும் கட்டமைப்பு**




ஜனநாயகத்தில் மட்டும் அமுல்படுத்துவது ஒரு பிரச்சினையாக இருப்பதில்லை என்பதனை கருத்திற்கொள்ள வேண்டியது முக்கியமாகும். ஹனி ஸய்னுல்பாய் 2009 IFES வெளியீட்டான "அரசியல் நிதியை ஒழுங்கமைத்தல்-உலக அனுபவம் என்ற அத்தியாயத்தில் குறித்துக் கூறுவது போன்று அரசியல் நிதியை அமுல்படுத்துவதற்கும் மேற்பார்வை செய்வதற்குமான நடைமுறைத் தீர்வானது " உறுதியான நிறுவன முறைமையும்,அரசியல் நபர்கள் சட்டத்தை தவிர்க்காது ஏற்றுக்கொள்கின்றமையும், இரட்டைப்பதிவு உத்திகளும், சுயாதீன செலவுகளின் மீது நம்பிக்கை பொதுவானதாக இருக்க வேண்டும்."[7]

வினைத்திறனான அமுல்படுத்துகைக்கான பொதுவான சிபாரிசு என்னவென்றால், பொறுப்புவாய்ந்த நிறுவனமானது வன்முறைகளை இனம்கண்டு இருக்கின்ற விதிமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்கு தெளிவான ஆணை மற்றும் திறன்விருத்தியை கொண்டிருக்க வேண்டும்.அனேகமான நாடுகளில் தேர்தல் முகாமைத்துவக்குழுவானது அரசியல் நிதி தொடர்பாக மேற்பார்வை செய்யும் பொறுப்புடையது. மேற்பார்வை செய்யும் குழுவாக அரசியல் கட்சிகளின் ஆணையாளர்களாக கூட இருக்கலாம்.இதனைவிட கணக்காய்வு நிறுவனம்,நீதிமன்றம் போன்றவைகளும் செயற்படலாம்.

என்ன அமைப்பாக இருந்தாலும்,நிறுவனமானது தனிநபர்கள்,நிறுவனங்கள் அனேகமாக சிரேஷ்ட அரசியல்வாதிகள் மற்றும் ஆளும் அரசியல் கட்சி அனேகமாக அரசின் தலைவர்களை மேற்பார்வை செய்வதற்காக அமைப்பை உருவாக்க வேண்டும். இதன் விளைவாக குறித்த நிறுவனமானது கவனமாக நிதி ஆவணங்களை விசாரணை செய்யாமல் இருப்பதற்கான அழுத்தங்களுக்கு முகம் கொடுக்க நேரிடும். ஆரசியல் நிதி மேற்பார்வையில் பணியாற்றும் நபர் ஒருவர் உங்கது வேலையை மிகவும் தீவிரமாக எடுத்துக்கொள்ள வேண்டும் ஏனென்றால் அது உங்களது வாழ்க்கைக்கே அச்சுறுத்தலாக இருக்கலாம்.

---

[6] Pinto-Duschinsky, Michael. Taking Democracy Seriously Series, No. 1. *Political Finance in the Commonwealth*. Commonwealth Secretariat, London, 2001. pg 25.

[7] Ohman, Magnus & Zainulbhai, Hani. *Regulating Political Finance, the Global Experience*. International Foundation for Electoral Systems, Washington, 2009.

நிறுவனங்களுக்கான தலைவர்களை நியமிக்கும் கட்டமைப்பு மிகவும் முக்கியமாதொன்றாகும்.இவர்கள் தான் நிறுனத்தின் சொந்த வரவு செலவுகளை கட்டுப்படுத்துபவர்களாக இருக்கின்றனர்.

வினைத்திறனாக இருப்பதற்கு, நடைமுறைப்படுத்தும் நிறுவனமானது வினைத்திறனான தண்டனைகளை அடையக்கூடியதாக இருக்க வேண்டும். பொருத்தமான தண்டனைகள் இருக்க வேண்டும்.அவை சிறிய சட்டமீறல்களுக்கு மிகவும் இலேசான நிர்வாக தண்டனையையும் - நிதி அறிக்கையை சமர்ப்பிக்க தாமதித்தல்-தேர்தலில் பங்குபற்றுவதற்கு அரசியல் கட்சியினை அல்லது வேட்பாளர் ஒருவரை மறுத்தல். இந்த பங்குபற்றுதலுக்கான மறுப்பானது பின்னர் தகுதிக்கேற்றவாறு அறிக்கையிடும் தேவைகளுக்கு இணங்க வெளிப்படையான மறுப்பாக மாற்றலாம்.இறுதியாக தொடர்ச்சியாக நிதி துர்முகாமைத்துவம் நிரூபிக்கப்படுமாயின், அந்தக் கட்சியை களைத்துவிடலாம்.(அதாவது வாக்கு வாங்கல்,அரச வளங்களை துஷ்பிரயோகம் செய்தல் கண்டுபிடிக்கப்பட்டால்).அவ்வாறான தண்டனைகள் குடியியல் அல்லது குற்றவியல் நடவடிக்கைகளையும் உள்ளடக்கியிருக்க வேண்டும். என்ன அணுகுமுறையாக இருந்தாலும், பாதிக்கப்பட்ட பகுதியினர் தீர்மானத்திற்கு எதிராக சட்டவாட்சிக்குட்பட்டு மேன்முறையீடு செய்யும் உரிமை இருக்க வேண்டும்.

அது மிகவும் தெளிவாகக் குறிப்பிடத் தேவையில்லை. இருந்தாலும், தெளிவான சட்ட ஆணைக்கு அப்பால் தேவையான தொழில்நுட்ப திறன்விருத்தி, அமுல்படுத்தும் குழுவின் சுயாதீனம், இருக்கின்ற விதிமுறைகளை அமுல்படுத்துவதற்கான அரசியல்வாதிகளின் விருப்பம் முக்கியமானவை. இவை இல்லாமல் இருக்குமாக இருந்தால் எந்த முறைசார் விதிமுறைகளும் புறக்கணிக்கப்படும்.

## சிவில் சமுகத்தினதும் ஊடகத்தினதும் வகிபங்கு


*“ஒரு காரியத்தைச் செய்து முடிப்பதற்கான இரகசியம் செயல்பட வேண்டும்”*
Dante Alighieri (Italian poet, 1265-1321)

அரசியலில் பணத்தைக்கட்டுப்படுத்துவதில் தகுதியான அரச நிறுவனங்கள் முறைசார் ஒழுங்குவிதிகளை சிறப்பாக அமுல்படுத்துவது முக்கியமாதொன்றாகும். எமது அனுபவத்தில் அவை ஒரு போதும் போதுமானதாக இருந்ததில்லை. எனவே ஏனைய பங்குதாரர்கள் பணம் எவ்வாறு அரசியல் முறைக்குள்ளும் வெளியும் பாய்ச்சப்படுகின்றது என்பதனை மேற்பார்வை செய்ய முனைப்பான பங்கெடுக்க வேண்டும். இயற்கையாகவே அரசியல் கட்சிகளும் அரசியல்வாதிகளும் பொறுப்புடன் செயல்படுவதற்கு முக்கியமான பங்குள்ளது. எனினும் அரசியல் நிதியில் வெளிப்படுதன்மையை அதிகரிப்பதற்கான முயற்சிகளானது அவர்கள் தங்களது நடத்தைகளை மாற்றியமைக்கும் வரை காத்திருக்க முடியாது.

### சிவில் சமூகம்

அரசியலில் பணத்தைக் கட்டுப்படுத்துவதில் மிகவும் முக்கியமான வகிபங்கு சிவில் சமூகத்திற்கு இருக்கின்றது. இவர்கள் மக்கள் வாக்கு வாங்குவது ,அரச வளங்களை துஷ்பிரயோகம் செய்வது மற்றும் ஒவ்வொரு நாட்டிலும் காணப்படும் விதிமுறைகள் தொடர்பாக விழிப்புணர்வுடன் உள்ளார்கள் என்பதனை வலியுறுத்துபவர்களாக இருக்கின்றனர். இதனைவிட இவர்கள் அரசியல்

**படம் 6 : அரசியல் நிதி வெளிப்படுதன்மையை உறுதிசெய்ய சிவில் சமூகத்தின் வகிபங்கு**



கட்சிகளினதும்,வேடபாளர்களினதும் நடத்தைகளை உன்னிப்பாக கண்காணிக்க கூடிய முக்கிய வகிபங்கை வகிக்கின்றனர். இதனை அரச நிறுவனங்கள் செய்வதற்கான திறன்விருத்தியும்,அரசியல் சுதந்திரமும் இல்லாதனால் சிவில் சமூகம் செய்யக்கூடியதாகவுள்ளது. அவ்வாறான செயல்திட்டங்கள் பல்வேறு நாடுகளில் முன்னெடுக்கப்பட்டுள்ளன. மற்றும் உள்ளூர் தேர்தல் கண்காணிப்பாளர்கள் குழுக்கள் அரசியல் நிதியை அவர்கள் கையாளும் பிரச்சினைகளுக்குள் சேர்க்கின்றனர்.( அரசியல் நிதியை கண்காணிப்பதென்பது வாக்களிக்கும் நாளைக்கு அதிகளவான நாட்களுக்கு முன்பே ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.)

**ஊடகம்**

பாரம்பரிய மற்றும் புதிய ஊடகம் இரண்டிற்கும் அரசியல்வாதிகள் எங்கு பணத்தைப் பெறுகின்றார்கள் அதனை எவ்வாறு செலவு செய்கின்றார்கள் என மக்களுக்கு தெரியப்படுத்தும் பொறுப்புள்ளது. அரசியல் பலத்திற்காக பிரபல்யம் குறைந்த ஒருவர் பணத்தை வைத்து சமூக விழுமியங்களுக்கு மாற்றமாகவும்,விதிகளுக்கு புறம்பாகவும் துர்நடத்தை மற்றும் வன்முறைகளில் ஈடுபடுவதனை ஊடகமானது வெளிப்படுத்த வேண்டும்.

ஒழுங்குமுறையை மறுமலர்ச்சி செய்யும் நிறுவனங்களுக்கு பின்னால் ஊழல் ஒரு காரணியாக நிற்கின்றது. எனினும் ஊழலானது அரசியல் நிதியில் எல்லா நேரத்திலும் விபரிக்க முடியாதது. அது மாற்றத்திற்கு மிகவும் முக்கியமான உந்து சக்தியாகும்.மக்கள் தேர்தல் பிரச்சாரம் மற்றும் நிதி விதிமுறைகள் மீறல்களினால் ஆத்திரமடைந்திருந்தனர் என்றால்,அவை எதிர்காலத்தில் மீண்டும் இடம்பெறாமல் இருக்க தடுப்பதற்கு நிர்ப்பந்திக்கலாம். முன்னால் தேர்தல் பணிப்பாளர் நீதி திணைக்களத்தின் குற்றவியல் கிளையில் இருந்த கிரேக் டொன்ஸான்டோ வலியுறுத்துவது “ அரசியல் நிதி ஊழல்களுக்கு எவ்வாறு ஒரு நாடு பிரபலிக்கின்றது என்பது அந்த நாட்டின் ஜனநாயக நிறுவனங்களின் பலத்தை நிர்ணயிக்கும ஒரு முக்கியமான் காரணியாகும்..”[8]

நீண்ட காலத்திற்கு செய்யும் முன்னேற்றத்திற்காக ஊடகமானது தனிப்பட்டவர்களின் ஊழல்களை மையப்படுத்தாது நிலைமையை முன்னேற்றுவதற்கு விமர்சன ரீதியாக தொடர்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். தேர்தலுக்கு முன்னர் மறுமலர்ச்சி ஏற்படுத்துவோம் என்று வாக்குறுதியளிப்பது அரசியல்வாதிகளுக்கு புதுமையான ஒன்றல்ல. அவை தேர்தலின் பின் மறக்கடிக்கப்பட்டவைகளாக மாறுகின்றன.

[8] Donsanto, Craig. “From Crisis to Reform, a Historical Perspective” in *Democracy at Large*, Vol 2, No 4 2006, pg 11.

## தீர்மானங்கள்

*''பணம் வெற்றியை உருவாக்குதில்லை,சுதந்திரம் தான் அதனைச் செய்யும்''*
நெல்சன் மண்டேலா (முன்னால் தென்ஆபிரிக்க ஜனாதிபதி)

சில வருடங்களிற்கு முன் IFES மற்றும் பல நிறுவனங்கள் அரசியலில் நிதியைக் கட்டுப்படுத்தல் மற்றும் வெளிப்படுதன்மை பல தசாப்தங்கள் பணியாற்றும் போது கற்றுக் கொண்ட பாடங்கள் அடையாளம் காணப்பட்டன. எனினும் இந்த அனுபவங்கள் பிராந்தியத்திற்கு பிராந்தியம்,நாட்டுக்கு நாடு வேறுபடுகின்ற போதிலும் (காலமாற்றத்தின் அடிப்படையில்) 5 முக்கியமான புரிந்துணர்வுகள் பூகோள ரீதியாக உண்மையானது என அடையாளம் காணப்பட்டது.

1. ஜனநாயகமான அரசியலிற்கு பணம் அவசியம் மற்றும் அரசியல் கட்சிகள் அவர்களுடைய பங்கை சரிவரச் செய்வதற்கு நிதியை அணுகக்கூடியதாக இருக்க வேண்டும். ஒழுங்குவிதிகளானது ஆரோக்கியமான போட்டித்தன்மையைக் கட்டுப்படுத்தக்கூடாது.
2. பணமானது அரசியல் முறைமையில் பிரச்சினை தராத ஒன்றாக ஒருபோதும் இருந்ததில்லை. எனவே ஒழுங்குவிதிகள் விரும்பத்தக்கது.
3. சூழல் மற்றும் அரசியல் கலாச்சாரம் என்பன அரசியலில் பணத்தினைக் கட்டுப்படுத்தும் உபாயங்களை வகுக்கும் போது கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.
4. வினைத்திறனான ஒழுங்குவிதிகள் மற்றும் வெளிப்படுத்துகை என்பன அரசியலில் பணத்தினால் ஏற்படும் பாதகமான விளைவுகளை கட்டுப்படுத்துவதற்கு உதவியாக இருக்கும். ஆனால் அவை நன்கு சிந்தித்து நடைமுறைப்படுத்தினால் மாத்திரம்.
5. வினைத்திறனான மேற்பார்வையானது பல்வேறு பங்குதாரர்களின் தொடர்புகளில் வெளிப்படு தன்மையின் அடிப்படையில் தங்கியுள்ளது. (அதாவது ஒழுங்கமைப்பாளர்,சிவில் சமுகம் மற்றும் ஊடகம்)

மேலே கூறப்பட்டவைகளுக்கு அப்பால், அரசியல் நிதியை வினைத்திறனாக மேற்பார்வை செய்வதானது சரிவர நடைமுறைப்படுத்துவதற்கு வருடங்கள் அல்ல பல தசாப்தங்கள் எடுக்கும் என்ற உண்மையை புரிந்து கொள்வது முக்கியமானதாகும். யாராவது வெளிப்படுதன்மையை ஏற்படுத்துவதற்கு முயலுவர்களாயின் அவர் மிகவும் பொறுமையாகவும்,நீண்ட காலம் பணியாற்றத் தயாராகவும் இருக்க வேண்டும்.

எனினும் இந்த இடர்களுக்கு தீர்வு எடுக்க எத்தணிக்கா விட்டால் அரசியலானது வாக்குகளால் அன்றி பணத்தினால் தீர்மானிக்கும் பொறிமுறையாக மாறிவிடும். வினைத்திறனான கட்டுப்பாடானது அனைத்து பங்குதாரர்களின் ஒருங்கிணைந்த மற்றும் நீடித்த முயற்சி மூலம் கொண்டுவரலாம்.

## வளங்கள்

Group of States against Corruption (GRECO) Information about efforts regarding political finance in the Council of Europe region. Available at http://www.coe.int/t/dghl/monitoring/greco/

International Foundation for Electoral Systems (2013) *Political Finance Oversight Handbook*. Available at http://ifes.org/publications/tide-political-finance-oversight-handbook. Also available in Indonesian and Russian.

International IDEA (2012) *Political Finance Database*. Available at http://www.idea.int/political-finance/

Library of Congress (2011) *Campaign Finance: An Overview.* Available at http://www.loc.gov/law/help/campaign-finance/index.php

Nassmacher, Karl-Heinz (2009) The Funding of Party Competition: Political Finance in 25 Democracies. Nomos.

Ohman, Magnus & Zainulbhai, Hani (eds) (2009) *Regulating Political Finance, the Global Experience*. International Foundation for Electoral Systems, Washington. *Available in English, Dari, French, Pashto and Russian.*

Open Society Justice Initiative (2004) *Monitoring Election Campaign Finance: A Handbook for NGOs*. Available at http://www.soros.org/initiatives/justice/articles_publications/publications/monitoring_20041123

Pinto-Duschinsky, Michael (2011) *International Comparisons*. Study prepared for the Inquiry into Party Funding, United Kingdom Committee on Standards in Public Life July 2011. Available at http://www.public-standards.org.uk/Library/Pinto_Duschinsky___International_Comparisons_August_2011.pdf

U4 Anti-Corruption Resource Centre, *Money in Politics*. Available at http://www.u4.no/themes/money-in-politics/

Transparency International and the Carter Center, *The Crinis Project* http://www.transparency.org/regional_pages/americas/crinis